## மாகாண வீதிகள் செயற்திட்டம் -- ஊவா மாகாண செயற்திட்ட அமுலாக்கல் கூறின் (பீஜயூ) - 2010

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2010 மார்ச் 31 இலிருந்து திசெம்பர் 31 வரையான காலத்திற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) மீளாய்விற்குட்பட்ட காலத்தின் போது விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப வைப்பும் அதிலிருந்தான பற்றுதல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2010 மார்ச் 31 இலிருந்து திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செயற்திட்டத்தின் ஊவா மாகாண அமுலாக்கல் கூறின் (பிஎம்யூ) செலவினம் ரூபா. 656,517,564 ஆக இருந்தது. 2010 மார்ச் 31 இலிருந்து திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செலவினத்தின் பொழிப்பு பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| **செலவின விடயம்** | **2010 மார்ச் 31 இலிருந்து திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செலவினம்** |
|---|---|
| | ரூபா |
| சிவில் வேலைகள் | 625,069,513 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 1,146,294 |
| அலுவலக உபகரணங்கள் | 2,070,197 |
| ஆலோசனைகள் | 5,031,215 |
| அதிகரிக்கும் மற்றும் செயற்பாட்டுக் கிரயம் | 23,200,345 |
| மொத்தம் | 656,517,564 |

## 2.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, செயற்திட்ட ஒருங்கிணைப்புக் கூறு, செயற்திட்ட அமுலாக்கல் கூறு- ஊவா, செயற்திட்ட அமுலாக்கல் கூறு- கிழக்கு மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் கூறு- வடக்கு மாகாணம் என்பவற்றிற்காக நான்கு புறம்பான விசேட (டொலர்) கணக்குகள் திறக்கப்பட்டிருந்தன. மீளாய்விற்குட்பட்ட காலத்தின் போது ஊவா மாகாண செயற்திட்ட அமுலாக்கல் கூறின் (பிஎம்யூ) விசேட (டொலர்) கணக்கிற்கான செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | யூ.எல். டொலர் | ரூபா |
|---|---|---|
| பெறபப்பட்ட ஆரம்ப வைப்பு | 13,716,776 | 1,541,141,509 |
| கூட்டுக: மீள்நிரப்பல்கள் | இல்லை | இல்லை |
| | 13,716,776 | 1,541,141,509 |
| கழி:- | | |
| பற்றுதல்கள் (எவ்ஏ) | 6,075,872 | 677,396,183 |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | - | 15,964,081 |
| 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 7,640,904 | 847,781,245 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 3.1 ஒப்பந்த நிர்வாகம்

செயற்திட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்திலுள்ள மாகாண வீதிகளின் அபிவிருத்திக்கான சாத்தியவள அறிக்கையின்படி, அபிவிருத்தி செய்வதற்காக 22 வீதிகளின் 330 கிலோ மீற்றர்கள் இனங்காணப்பட்டிருந்தன. அவற்றில் 109.93 கிலோ மீற்றர் வீதிகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றத்தற்காக ரூபா 3,951,698,957 கூட்டு மொத்தத் தொகையான 5 ஒப்பந்தங்கள் 2010 நவம்பர் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தன. 2011 மே 10 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனை நேரத்தில் ஒவ்வொரு ஒப்பந்தத்தின் பௌதீக செயலாற்றலும் இலக்கினைவிட பின்தங்கியிருந்தது. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளர் 2011 யூன் 27 இல் பின்வருமாறு